... காக்காவிட்டால்
... கண்விழிப்ப... வியர்த்தம்" தாபிதம்: 1876

சத்தியவேத

# பாது காவலன்

தந்தி: "கதலிக்பிற..." யாழ்ப்பாணம்.
தொலைபேசி: ..300
REGISTERED AT THE CEYLON G. .O. AS A NEWSPAPER

89-ம் புத். || யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு ஐப்பசி மீ 31-ந் திகதி சனிக்கிழமை — பிர...தம் 15 || 43-ம் இல.

ஞானோபதேச நடுநிலையம்,
மேற்றிராசன இல்லம், யாழ்ப்பாணம்.

**ஞானோபதேச கருத்தரங்கு**

● முல்லைத்தீவு

நிகழிடம்: மத்திய கல்லூரி
நாள்: 7-11-64 சனிக்கிழமை
நேரம்: காலை 8-45 மணி

* * *

● ஊர்காவற்றுறை

நிகழிடம்: சென் அன்ரனிஸ் கல்லூரி.
நாள்: 15-11-64 ஞாயிறுவாரம்.
காலம்: 8-45 மணி.

நிர்வாகி.

உரோமாபுரியிலிருந்து ... ... ...

# ஆயரின் அறிக்கை

## தூயவாழ்வு, திருச்சபையின்

▲ கிறிஸ்துநாதரை தியானக்கண்ணுடன் நோக்க வேண்டும்.
▲ செயலாற்ற ஆத்திரப்பட வேண்டாம்; ஆயத்தப்படுத்த வேண்டும்.
▲ கிறிஸ்தவன் தூயவனுக, அப்போஸ்தலனுக வாழவேண்டும்.

## இரட்சணிய அலுவலில் பங்குபெறுதல்

இவை இரண்டும் கிறிஸ்தவனுடைய இயல்பான குணங்கள் என்று எமது மேற்றிராணியார் மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை அவர்கள் பாதுகாவலனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடுகின்ருர்.

கடிதத்தின் சாராம்சம்...

### காரியத்திட்டம்

பரிசுத்த தந்தையும் சங்கப் பிதாக்களும் ஒருமனப்பட்டவர்களாய் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் அருளை வேண்டினுர்கள்—தொடர்ந்து வேண்டுகிருர்கள். முதல் பெந்திகோஸ்து அன்று இஸ்பிரீத்துசாந்து அர்ச். பேதுருவானவருடனும் அப்போஸ்தலர்களுடனும் ஐக்கியமாய் இருந்து அவர்களுக்குப் புத்துயிர் அளித்து சகலகாரியங்களையும் படிப்பித்தது போன்று இன்றும் சங்கத்தில் உண்மையாக பிரசன்னமாய் இருக்கிருர். ஆகையால் இன்று அர்ச். பேதுரு

[ தொடர்ச்சி 5-ம் பக்கம் ]

### வத்திக்கான் தந்தி

மார்கழி 2-ம் திகதி இந்தியாவிற்குப் பாப்பரசர் விஜயம் செய்வார். மறுபடி 4-ம்திகதி புறப்படுவார்.

### பேசப்போவது பெண்ணு?

— வத்திக்கான்

திரு. பற்கிகன் சாதாரண இல்லற கத்தோலிக்கர். சங்கத்தில்பேசி, பாராட்டைப் பெற்றபிற்பாடு, "அடுத்தபடியாக ஒரு பெண்தான் பேசவேண்டும்" என்று சில மேற்றிராணிமார் கருத்துத் தெரிவித்ததாக அறியவருகின்றது!

## இரத்தத்தில் வளர்ச்சி

— உரோமை

உகண்டாதேசத்தலைவர் ஜனுதிபதி மியூற்றேசாஎன்பவர் சென்ற வாரம் தம்முன்னேராகிய 22 உகண்டாவேதசாட்சிகளுக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டும் திருவிழாவில் பங்குபெற வத்திக்கான்சென்று அர்ச். பேதுருவானவர் தேவாலயத்தில் சங்கபிதாக்களுடன் பிரசன்னமாயிருந்தார். இவர் அங்கிளிக்கன் கிறிஸ்தவ சபையைச்சேர்ந்தவர் வேதசாட்சிகளை வதைத்தமன்னனுகிய முவாங்கா என்பவர் இவரது வம்சாவழியினர். இவரைத்தவிர வேறு 117 உகண்டாதேசப் பிரதிநிதிகள் அத்திருச்சடங்குக்குச் சமுகம் அளித்தனர். வேதசாட்சிகளில் ஒருவரின் வம்சாவழியினர் தற்பொழுது அந்நாட்டில் அதிமேற்றிராணியாராக இருக்கின்ருர். வேதசாட்சிகளுக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அளிக்க நேர்ந்தது அத்தேசத்தில் வேத வளர்ச்சிக்கு அனுகூலமாக விளங்குகின்றது என்று அவ்வூர் மேற்றிராணியார் ஒருவர் கூறினுர்.

### கேவலம்!

—கனடா.

கோவில்களைக் கட்டுவதிலும், அலங்கரிப்பதிலும் கட்டுப்பாடற்றவிதமாகச் செலவுசெய்வது துரோகம் என்று திருவழிபாட்டுக் குழு ஒன்று முறையிடுகின்றது. "தெய்வவழிபாட்டுக்கு உரியவைகள் மகத்தானவையாக இருக்கவேண்டும். ஆனுல், துன்பத்திலும் வறுமையிலும எத்தனையோ மக்கள் வருந்துவதை எண்ணும்பொழுது ...... அலங்கரிப்பதற்கு அளவுமீறிச் செலவுசெய்வது முறையல்ல" என்றும் கூறுகின்றது.

### நடமாடும் தந்தை

—இத்தாலி.

சென்றசனிக்கிழமை பரிசுத்த தந்தை ஹெலிகொப்டர் மூலம் மொன்ரே கசினே என்று அழைக்கப்படும் இடத்திற்குச் சென்ருர். கடந்த யுத்தத்தில் குண்டு வீழ்ச்சியினுல் பாழடைந்த பழம் பெருமைவாய்ந்த சந்நியாசமடம் அபிஷேகம் செய்யப்பட்டது. அங்கு அர்ச். ஆசீர்வாதப்பர் ஐரோப்பாவின் பாதுகாவலராகப் பிரகடனஞ் செய்யப்பட்டார். 529-ம் ஆண்டு ஆசீர்வாதப்பர் அந்தச் சந்நியாசமடத்தைத் தொடங்கினுர்.

### நரகம் உண்டு!

— வத்திக்கான்

சத்திய திருச்சபை கூறுவது என்னவென்ருல், "பாவம் செய்யும் சகலரும் நரகத்தில் நித்திய காலம் உத்தரிக்க வேண்டும்" என்பதே. இதைச் சங்கத்தில் கூடியிருக்கும் பிதாக்கள் வற்புறுத்தினர்.

## கலைஉலகம்

கடவுளுக்குச் சேவைசெய்ய வேண்டும். நாடகமும், நடனமும், சிலையும், சித்திரமும் கடவுள்பக்தியை வளர்ப்பதற்கு கருவிகளாகக் கடமையாற்ற வேண்டும்.

கலையைக் கடவுள் வழிபாட்டுக்குப் பணிசெய்வித்தபண்பு இந்தியாவிற்கு உண்டு. கடவுள் வழிபாட்டிற்கு எழுப்பப்பட்ட அழகிய கலைக் கோவில்கள் எத்தனை? சிங்காரமான சிலைகள் எத்தனை? ஒப்பற்ற ஓவியங்கள் எத்தனை? நாடகமும், நடனங்களும்தான் எத்தனை? ....பழைமையும் பண்பும் வாழ்ந்த பாரத நாட்டியம் இதற்கு ஓர் உதாரணம். அந்த நாட்டியம், "கடவுளிடம் கற்ற கலை" என்னும் அளவிற்கு கலையும் கடவுள் வழிபாடும் பின்னிப்பிணைந்து வாழ்ந்து வந்திருக்கின்றன இந்தியாவின் இணையற்ற வரலாற்றில். இன்னும் சில நாட்களில் பம்பாயில் நடக்கப் போகும் அகிலஉலக சற்பிரசாத மகாநாட்டின் தலைசிறந்த ஓர் அம்சமாக பாரத நாட்டியம் இருக்கும் என்பது உறுதி. இந்தச் சற்பிரசாதமகாநாட்டில் பாரதநாட்டியம் இடம் பெறுவதன் ஒரேநோக்கம் உண்மைக் கடவுளாகிய கிறீஸ்துவைப் போற்றிப் புகழ்ந்து வாழ்த்தி வணங்குவதுதான். அதில் 1,000 பாடக பாடகிகளும், 300 நடன நடிகைகளும் பங்குபற்றுவார்கள். கருதினுல் கிராசியாஸ் உடைய வேண்டுகோளின் பேரில் இதைக் கொண்டு நடத்துகின்ருர். வண. ஜோர் புறெக்ஸ்—இவர்தான் இந்த நடனத்துக்கு இசை அமைத்துள்ளார்.

1960-ம் ஆண்டில் ஜேர்மனியில் கடந்த சற்பிரசாத மகாநாட்டிலும், 30 இந்தியர் ஒரு நடனக்குழு என்ற முறையில் பங்குபற்றினர்—பலருடைய பாராட்டையும் பெற்றுர்கள். வண. பொறுக்ஸ் சுவாமி ஒரு நடனநிலையத்தையும் தொடங்கி உள்ளார். சமஸ்கிருத மொழியில் "ஜ்யான் ஆஸ்ராம்" என்று அழைக்கப்படுகின்ற இதன் அர்த்தம் "வேத அறிவு"— "புனித இடம்." "கிறீஸ்துநாதர் ஓர் இந்தியன் அல்ல; ஆனுல், இந்திய உடைகள் மூலம்தான் கிறீஸ்தவ சமயத்தை இந்தியாவில் அறிமுகப்படுத்தலாம்" என்று வண. சுவாமி புறெக்ஸ் கருதுகிருர்.

சற்பிரசாதப் புகழ்பாட நடக்கவிருக்கும் நடனநாடக மூலமாய், கலைக்கோவிலான பாரதம் முழுவதும் கடவுளின் வாழ்த்துப்பாவில் கலந்துகொள்ளும்.

—இந்தியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**கார்த்திகை மாதம்—1964.**

| | | | |
|---|---|---|---|
| 1 | ஞா. | சகல அர்ச்சியசிட்டர்கள் திருநாள் | [வெ] |
| 2 | தி. | சகல மரித்த விசுவாசிகள் திருநாள் | [க] |
| 3 | செ. | காலதினம் | [ப] |
| 4 | பு. | அர்ச். சார்ள்ஸ் | [வெ] |
| 5 | வி | காலதினம் | [ப] |
| 6 | வெ. | காலதினம் | [illegible] |
| 7 | ச. | மரியாயின் சனி | [வெ] |

# சத்தியவேத பாதுகாவலன்

**1964-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31-ந் திகதி**

## கடவுளின் வார்த்தை

'கற்க கசடற கற்பவை' என்பது வள்ளுவருடைய வாக்கு. உலக அறிவைப் பொறுத்தமட்டில் இந்தப்பொன்மொழியைப் பின்பற்றுவது மக்கள் எல்லோருக்கும் பயன்தரும். கடவுள் வெளியிட்ட வேதாகமத்தைப் பொறுத்தமட்டில் அதைக்கற்று, தவறு இன்றிக் கற்று, அதன்படி வாழ்ந்துவருவது கத்தோலிக்க மக்களுடைய கடமை, பெருமை.

வேதாகம உலகில் போற்றத்தகுந்த வளர்ச்சியும் ஆராய்ச்சியில் மறுமலர்ச்சியும் சிலகாலங்களாகப் படிப்படியாக வளர்ந்து வந்திருக்கின்றன. இந்தப் புத்துணர்ச்சிக்குப் பாப்பரசர்கள்—சிறப்பாகப் பன்னிரண்டாம் பத்திநாதர் உற்சாகம் அளித்திருக்கின்றனர். இன்று வேதாகம மறுமலர்ச்சியின் காலமென்றால் தவருகாது.

வேதாகமம் கடவுளுடைய நூல்; அவர்தான் அதன் ஆசிரியர். மனிதருடைய துணையைக்கொண்டு தம்மைப்பற்றி எமக்கு வரைந்து கொடுத்தார். அவரே வேதாகமத்தை எழுதுவித்தார். சுவிசேஷங்கள் யேசுநாதருடைய வாழ்வின் வரலாற்றைப்பற்றிக் கூறுகின்றன. அவருடைய போதனைகளையும், சாதனைகளையும் குறிப்பிடுகின்றன. அவற்றை எழுதிய சுவிசேஷகர்கள் எல்லோரும் நேரில் தாமே கண்டவைகளை எழுதியது என்றல்ல அர்த்தம். ஆனால், தாய்த்திருச்சபை ஆதிகாலத்தில் கிறீஸ்துநாதர் மட்டில் கொண்டிருந்த உயிருள்ள விசுவாசம் உறுதியான கருத்துக்கள், வாழ்வின் மையமான வழிபாடுகள் ஆகியவற்றை நூல்கள் அடக்கி இருக்கின்றன. எனவே, சுவிசேஷங்களில் நாம் தேடவேண்டியது பழங்காலத்தில் நடந்து முடிந்துபோன சம்பவங்களை மாத்திரம் அல்ல; சிறப்பாக, தாய்த்திருச்சபை காரணம் கொண்டு காத்து வைத்தவைகளையும் நாம் தேடுதல் அவசியம்.

வேதாகமம் உயிரற்ற நூல்அல்ல. உயிருள்ள துடிப்பு நிறைந்த ஒரு சமுதாயத்தின் அதாவது திருச்சபையின் வாழ்வின் சாதனம். அச்சமுதாயத்தின் வாழ்வு, மனப்பான்மை, படிப்பினைகள், செயல்கள் முதலியவற்றின் வெளியீடு. அறிவை வளர்க்கும அறிக்கை. திருச்சபையின் நிர்வாகம் பற்றியும், தேவதிரவிய அனுமானங்களைப்பற்றியும், அதன் சீரியமேற்கோள்கள் முதலியவற்றின் விளக்கத்தைப்பற்றியும் தெளிவாக சுவிசேஷங்களில் காணலாம்.

வேதாகமம் காலத்தினுல் அழியாத ஒருநூல்—கடவுளுடைய நூல்—அவருடைய திருமொழி. இன்றைக்கும், என்றைக்கும் எம்மை மீட்க வல்லமை உடையதாக விளங்குகின்றது.

எங்கள் இல்லங்களில் இருக்க வேண்டிய நூல் வேதாகமம். வாழ்வின் எந்நேரத்திலும் உதவவேண்டிய நூல் வேதாகமம். ஆழ்ந்து ஆராய்ந்து சிந்திக்க வேண்டிய நூல் வேதாகமம். வாழ்வாங்கு வாழப்படவேண்டிய நூல் வேதாகமம்.

## உழைக்கின்றனர் ....!

—பம்பாய்.

இந்தியாவின் பலபாகங்களிலும் உள்ள கன்னிகாஸ்திரிமார் மடங்களுள் சுமார் 1,500 மடங்கள் சற்பிரசாத மகாநாட்டுக்குச் சிலசில உதவிகள் புரியுமாறு கேட்கப்பட்டிருக்கின்றன. தேவதாயாரின் வறிய கன்னியர்கள் சபை அதிபராகிய சங்கைக்குரிய பட்றீசியா பிறுங்க் என்பவர் திருச்சடங்கு உதவியாளர் குழுவினரின் உபதலைவர்களில் ஒருவர். திருச்சடங்குகளுக்குத் தேவைப்படும் பொருட்களாகிய திருவஸ்திரங்கள், பாத்திரங்கள், பூசைக்கற்கள் முதலியனயாவும் கூடுமானவரையில்உள்நாட்டிலே உள்ள குருமார், சந்நியாச இல்லங்களிலும் கன்னிகா மடங்களிலுமிருந்து ஒன்றுதிரட்டப்படும் வேலை இவர் பொறுப்பில் விடப்பட்டிருக்கின்றது. வேலை பூர்த்தியடைந்துவருகின்றது.

## விளையாட்டு வீரர்களுக்கு

"இவ்வருட ஒலிம்பிக் போட்டியில் பங்குபெறும் வீரர்கள் யாவருக்கும், அவர்களை ரோக்கியோ நகரத்திலே உபசரிக்கும் யப்பானிய அரசாங்கத்தினருக்கும் எமது அன்பையும் மதிப்பையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்" என்றுகூறிப் பரிசுத்த பாப்பரசர் ரோக்கியோநகர [illegible] ராணியாரும் கருதினுலுமாகிய ரட்சூவேர் ஆண்டகை அவர்கள் மூலம் செய்தி அனுப்பியிருக்கின்றார். மேலும் அச்செய்தியில் 1960-ம் ஆண்டில் ரோமாபுரியில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் பங்குபெற்ற வீரர்அனைவருக்கும் 23-ம் [illegible] பாப்பரசர் வத்திக்கான் கோவில்மன்றத்தில் அளித்த குதூகலமான தரிசனத்தை ஞாபகப்படுத்தி இத்தகைய சர்வதேச போட்டிகளினுல் சமாதானத்துக்கும், மனிதாபிமான நல்லெண்ணவளர்ச்சிக்கும் ஏற்படும் நன்மைகளைப் பாராட்டுகின்றார் பரிசுத்ததந்தை.

*அறிவித்தல்*

## அனைத்துலக சற்பிரசாத மகாநாடு
### விசேஷ ஞானப்பூச்செண்டு

பம்பாய் சற்பிரசாத மகாநாட்டுக்காகத் தயாரித்த விசேஷ ஞானப்பூச்செண்டுகளின் விபரங்கள் அடங்கிய பத்திரங்களை வரும் கார்த்திகைமாதத்தின் முதலாம்கிழமை வண. காரியதரிசி சுவாமிகள் மேற்றிராசன இல்லம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பங்குக்குருமாருக்குத் தயவாக நினைவூட்டுகின்றோம்.

**யாழ்/மேற்றிராசன பரிபாலனர்,**
மேற்றிராசன இல்லம்,
யாழ்ப்பாணம்.

31-10-64.



● ஞாயிறு சிந்தனை

## சகல அர்ச்சியசிட்டர்களின் திருநாள்

"சகல அர்ச்சியசிட்டர்களின் பேரால் திருநாட் கொண்டாடி அனைவரும் ஆண்டவரில் அகமகிழ்வோம். அவர்களது திருநாளில் தேவதூதர் அக்களித்து தேவ சுதனைப் புகழ்ந்து போற்றுவார்கள்." (பிரவேச வாக்கியம்)

பரலோகவாசிகளான புனிதரும் பூவுலகவாசிகளான நாங்களும் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள். "நானே திராட்சைச் செடி; நீங்கள் அதன்கிளைகள்." கிறீஸ்துநாதர்கூறிய இந்தவார்த்தைகள் எமக்குப் பொருந்துவதுபோல அவர்களுக்கும் பொருந்தும். அவர்களுக்கு ஆன்மஉயிராக விளங்கும் அதே கிறீஸ்துதான் நமக்கும் உயிர்தருபவர். நாம் அவர்களோடும் ஒருவர் ஒருவரோடும் ஒன்றித்து இருக்கிறோம். ஏனென்றால், நாம் அனைவரும் எமது ஆன்ம உயிராகிய கிறீஸ்துவுடன் ஒன்றித்து இருக்கிறோம். இந்தக் குடும்பஉற்சவத்தில், நாம் அவர்கள் பாவத்தின் மேல்ஈட்டிய வெற்றியையிட்டு அகமகிழ்கிறோம்; அவர்கள் நாமும் இந்த மகிமையை அடைந்திடவேண்டுமென எமக்காகப் பரமனிடம் பரிந்துபேசுகின்றனர்.

புனிதர்கள் கடவுளை நேருக்குநேர் காண்கின்றனர். சகல இன்பத்தின் ஊற்றும், உடைவிடமுமாகிய கடவுளைக் கண்டுகளிக்கின்றனர். அவரை அறிந்து அன்புசெய்கின்றனர். இந்த அறிவிலும் அன்பிலும் அவர்களுடைய வேட்கைகள்யாவும் திருப்தியடைகின்றன. என்னே இவர்கள்பெற்ற பெரும்பேறு!

புனிதர்கள்ஒருவிதமாயச்சிருட்டிகள் அல்லர். அவர்களும் எங்களைப்போன்ற மனிதர்தான். எங்களைப்போலத்தான் அவர்களும் வாழ்ந்தார்கள். அவர்களும் எம்மைப்போல் வேலைசெய்தனர்; கல்வி கற்றனர்; பாவச்சோதனைகளை வென்றனர்; இன்பதுன்பங்களை அனுபவித்தனர். ஆனால், அவர்கள் நமதுஆண்டவரின் அன்பின்அழைப்பை ஏற்றனர். "வருந்திச் சுமைசுமக்கிறவர்களே நீங்கள் அனைவரும் நம்மிடத்தில் வாருங்கள்; நாம் உங்களுக்கு ஆறுதல்அளிப்போம்" [ஆரோகண கீதம்]. ஆம், அவர்கள் தமது சொந்த வல்லமையால் பரிசுத்ததனத்தை அடைய முடியாதென உணர்ந்தனர். எனவே, கிறீஸ்துவை நாடிச்சென்றனர். அவரின் உதவியைத் தேடிஓடினர். அவரின் அருளால் அர்ச்சியசிட்டர்கள் ஆகினர்.

நாமும் புனிதராவதற்கு இதுதான் ஒரேவழி. "நம்மிடத்தில் வாருங்கள்" என்றகிறீஸ்துவின் அழைப்பை நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டும். தாழ்மையுடன் அவரை நாடிச்செல்லவேண்டும். எமது விருப்புவெறுப்புகள் யாவையும் விட்டுவிட்டு அவரிடம் போகவேண்டும். ஏனெனில், இவைதான் எம்மைக் கிறீஸ்துவிடம்இருந்து பிரித்துவைக்கின்றன. நாம் கிறீஸ்துவை அண்டிச் செல்வதற்கு, பரிசுத்ததனத்தை அடைவதற்குத் தடையாகஇருப்பது எமது சித்தம் ஒன்றுதான். எனவே, நாம் புனிதராக வேண்டுமாயின் எமது சித்தத்தை நாம் பலியிடவேண்டும். எமது விருப்பு வெறுப்புக்களைத் தியாகம் செய்யவேண்டும். எப்பொழுதும் தேவனுடைய சித்தத்துக்குப் பணிந்து நடக்கவேண்டும். 'அவர்சித்தம் என் பாக்கியம்'என்ற மனப்பான்மையுடன் வாழவேண்டும். இது இலேசான காரியமல்ல. ஏனென்றால், தேவசித்தப்படி நாம் பெரும்துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருக்கும்; பாரச்சிலுவைகளைச் சுமக்கவேண்டிவரும். ஆனால் நாம் உண்மையாக எமது சித்தத்தைத் தேவனுக்குக் கையளிப்போமேயாகில், அவர் எம்மையும் புனிதராக்குவார் என்பது நிச்சயம்.

ஆகவே, இன்றையதினம் நாம் எமது சித்தத்தை முற்றாகத் தேவனுக்குக் கையளிப்போம். அவருடைய சித்தப்படி நாம் எப்பொழுதும் வாழுவோம்எனத் தீர்மானம்செய்வோம். அப்பொழுது கிறீஸ்துநாதர் வாக்களித்த நித்திய சம்பாவனையை நாமும் பெறுவோம். "பரலோகத்தில் உங்கள் சம்பாவனை ஏராளமாயிருக்கிறது" [சுவிசேஷம்].

இ. மரியவளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

அன்புச் சோதரிகளே ! வணக்கம் பல !

நம் அன்னையாம் திருச்சபையின் ஐக்கியப் பிரயோசனத்தை வெளிப்படையாக நம் உள்ளங்களில் பதியவைக்குந் திருநாட்கள் இரண்டு இதோ சமீபித்துக் கொண்டிருக்கின்றன. கார்த்திகை மாதம் 1-ந் தேதி, இவ்வுலக வாழ்க்கையில் போராடி முழுவதாக வெற்றியடைந்து இன்று இறைவனுடன் இன்பமெய்தும் சகல பரலோக வாசிகளுடனும் சேர்ந்து நாமும் அகமகிழ்வோம். எமது உலக போராட்டத்தில் வேண்டிய பெலனைநாடி இறைஞ்சுவோம். அடுத்து கார்த்திகை மாதம் 2-ந் தேதி. எம்மிடையேயின்று பிரிந்துபோய் உத்தரிப்புஸ்தல அக்கினியில் அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் ஆன்மாக்களுடன் நாமும் துயருறுவோம். அவர்கட்காகப் பூசைப்பலி, செபதபம், தானதருமம், சிலுவைப்பாதை ஆகியவற்றை ஒப்புக்கொடுப்போம். அன்றுமட்டுமல்ல; வரவிருக்கும் கார்த்திகைமாதம் முழுவதுமே இப்புண்ணிய ஆன்மாக்கட்கு உதவிசெய்யப் பின்வாங்காதிருப்போமாக!

சோதரி ரோஜா.

# செபமாலை சொல்லவா.....! நேரமில்லையே!

காலை 7மணி இருக்கும். பாடசாலை செல்வதற்காக பஸ்வண்டியை எதிர்பார்த்துக் கொண்டே தெருவோரத்தில் நின்று கொண்டிருந்தேன். நெல்விதைக்கும் காலமல்லவா?...... தலையில் எருக்கடகத்தைச் சுமந்தபடி வயலை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள் நடுத்தர வயதுள்ள மனுஷியொருத்தி. சடுதியாக அவள் நெற்றியிலும் மார்பிலும் திரித்துவஸ்தோத்திர அடையாளத்தைப் போட்டுக் கொண்டே கைகளிரண்டையும் குவித்தாள். அப்போதுதான் அவளது உழைப்பேறிய கரங்களினிடையே மின்னிய செபமாலை என் கண்களைக் கவர்ந்தது. 3-ங்காரணிக்கத்தின் முடிவில் இருந்தன அவள் விரல்கள். என்னைக் கூர்ந்துகொண்டே நடந்தாள் மரியன்னையின் அப்பிரிய சிஷ்யை.

**அவளுக்கு நேரமில்லை! ......ஆனல், அவள் செபமாலை சொன்னள்!**

* * *

அன்றொருநாள், அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தார் ஓர் இளைஞன். அவர் இலங்கை இராணுவப் பகுதியில் "சார்ஜனு"க்கடமையாற்றிக் கொண்டிருப்பவர். "பஸ்வண்டி"யை விட்டிறங்கி வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த அவரது கைகளின் விரல்கள் அன்னையின் மணிமாலையை உருட்டிக் கொண்டிருந்த காட்சி என்னைப் பரவசத்திலாழ்த்தியது. வீட்டுப்படியில் காலைவைத்ததும் செபமாலை அவர் காற்சட்டைப்பையைச் சரணடைந்தது.

**அவருக்கு நேரமில்லை!... ஆனல், அவர் செபமாலை சொன்னர்!**

* * *

பண்டத்தரிப்பில் பாவசமூட்டும் இடமாக விளங்குகின்ற "நொவிசியேற்"மடத்துத் தலைவியிடம் சற்று நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். வழியில் ஏற்கனவே எனக்கு அறிமுகமான பெண்ணொருத்தியைச் சந்தித்தேன். தரித்துநின்று எனது சுகசேமங்களை விசாரித்தாள் அம்மாது. அவள் ஒரு கையில் ஓலையினுல் பின்னப்பட்ட சிறுபை ஒன்று. மறுகையில் மாதாவின் மாலை. "எங்கே போகிறீர்கள்"? என்று வினவினேன். நொவிசியேற் "மடத்துக்கு முட்டைகள் கொண்டு போகிறேன்"என்ருள் அவள். என்னைக் கடந்ததும் திரும்பவும் அவள் விரல்கள் மாலையின் மணிகளை உருட்டுவதை அவதானித்தேன்.

**அவளுக்கு நேரமில்லை! ......ஆனல், அவள் செபமாலை சொன்னள்!**

* * *

மாதகல் பகுதி வயல்களினூடாகச் செல்லும் தெருவினூடாக "பஸ்வண்டி" சென்று கொண்டிருந்தது. கரையோரத்தில் அமர்ந்திருந்த யான் வயற்புறத்தில் வேலை செய்வோரது காட்சிகளை அவதானித்துக் கொண்டே இருந்தேன். முதியவர் ஒருவர் தமது வயலை உழுதுகொண்டிருந்தார் மாலை வேளைப் பொன்னிற வெய்யிலில். அவரது ஒரு கை ஏரைப்பிடித்திருந்தது. மறுகையில் "மாடுகளை ஓட்டும் தடிதானே"? என்கிறீர்களா? இல்லையில்லை, செபமாலை அன்னையின் மணிவடம் இருந்தது. பிரியதத்த மந்திரங்களை ஓதி அம்மணிகளை உருட்டியபடியே அமைதியாக உழுதுகொண்டிருந்தார். அவரது மாடுகளும் அம்மாலையின் மகத்துவத்தை உணர்ந்தனவோ என்னவோ? நேராக உழவுசாலில் சென்றுகொண்டிருந்தன.

**அம்முதியவருக்கு நேரமில்லை!... ஆனல், அவர் செபமாலை சொன்னர்!**

* * *

யாழ்ப்பாண ஆசனக் கோவிலில் செபஞ்செய்து கொண்டிருந்தேன். மதியவேளை. 7வயது நிரம்பாத சிறுமியொருத்தி கோவிலினுள் வந்தாள். புத்தகங்களைக் கீழே வைத்தாள். தையற்பெட்டியைத் திறந்தாள். ஒரு சிறு நீலக்கல் செபமாலையை எடுத்தாள். 10 மணிகளை 2 கைகளினதும் விரல்களுக்கிடையே பிடித்துக்கொண்டாள். பரபரப்பாக 10 பிரியதத்தமந்திரங்களை ஓதிமுடித்தாள். செபமாலையை பெட்டியினுள் போட்டாள். புத்தகங்களைக் கையிலெடுத்துக்கொண்டாள். ஓட்டமும் நடையுமாக வெளியேறினள். பின்தொடர்ந்தேன் அவளை. "தங்கச்சி! பள்ளிக்கூடமா போகிறீர்" என்றேன், "ஆமாம் மணி அடித்துவிடும். அப்புறம் ரீச்சர் அடிப்பா" என்ருள். "அப்படியானுல் நீர் சொல்லிக் கொண்டிருந்த 10 பிரியதத்தமந்திரத்தைச் சொல்லாமல் போயிருக்கலாமே" என்றேன் அவளைப் பேசவைக்கும் முயற்சியில். "ஐயையோ! பிறகு எப்படிச் செபமாலை சொல்லிமுடிப்பது. என்னுடைய அம்மா சொல்லியிருக்கிரு. காலைச் செபத்துடன் நான் முதல் 10 பிரியதத்தமந்திரம் சொல்ல வேண்டுமாம். காலை பள்ளிக்கூடத்துக்குப் போகையிலும், மத்தியானம் திரும்பி வருகையிலும் கோயிலுள் சென்று 10, 10 பிரியதத்தமந்திரங்களைச் சொல்ல வேண்டுமாம். மத்தியானம் பள்ளிக்குப் போகையிலும், பின்னேரம் வீட்டுக்குப் போகையிலும் கோயிலுக்குள் போய் கடைசி 10, 10 பிரியதத்த மந்திரங்களைச் சொல்ல வேண்டுமாம். அப்போ ஒரு செபமாலை முடித்து விடுவேனும்" என்று சொல்லிவிட்டு "நான் போகிறேன் அக்கா" என்றவண்ணம் ஓடினள் பாடசாலையை நோக்கி:

**அச்சிறுமிக்கும் நேரமில்லை.........ஆனல் அவளும் செபமாலை சொல்லத்தான் செய்தாள்!**

* * *

**நமக்கும் நேரமில்லை!... அஃது உண்மையே!......**

ஆனல், நாமும் செபமாலை சொல்வோம்!... ஐப்பசி மாதத்தில் மட்டுமல்ல!......வாழ்க்கைமுழுவதிலுமே.

# மகிழ்ச்சியடைகிரேம்........!

சென்ற 22-10-64 வியாழன் வாரம் "யாழ்ப்பாண மகளிர்மன்றக் கல்லூரிகளின் விளையாட்டுச் சங்கத்தினுல் நடாத்தப்பட்ட இறுதி வலைப்பந்தாட்டப் போட்டியில் எமது **யாழ்நகர் திருக்குடும்பக் கன்னியர்மட ஆங்கிலப் பாடசாலையானது** [illegible]ரேஷ்ட, கனிஷ்ட பகுதி இரண்டிலு[illegible] முறையே 17 : 10, 5 : 2 புள்ளிக[illegible]பெட்டி மகோன்னத வெற்றியீட்டி[illegible]ள்ளது. இதன் பயனுக, "வீரகேசரி"[illegible]னுல் வழங்கப்பட்ட வெள்ளிக்கேடய[illegible]தை சிரேஷ்டபகுதியினரும், வர்த்தக, போக்குவரத்துச் சபையினுல் வழங்கப்பட்ட வெள்ளிக் கேடயத்தை கனிஷ்ட பகுதியினரும் 1964-ம்ஆண்டின் வெற்றிச் சின்னங்களாக சுதாகரித்துக் கொண்டனர். கனிஷ்ட பகுதியில் மாறி பஸ்ரியாம்பிள்ளை, யசிந்தா திருச்செல்வம், ராஜகுமாரி அன்ரனிப்பிள்ளை, ஆசெம்ரா சிக்மறிங்கம், அஞ்சலா செல்லத்தம்பு, சாந்தி ஜர்மையா, ராஜமனோகரி துரைராஜா முதலிய வீரமணிகளும், சிரேஷ்ட பகுதியில் மாலினி கனகசபை, நீற்று ரூேஸ் பஸ்ரியாம்பிள்ளை, பிரான்சிஸ்கா ஜெகராஜசிங்கி, ஐலீன் மோசேஸ், சந்திரா கந்தையா, கிறிஸ்ரபெல் மரியாம்பிள்ளை, ஜொய்ஸ் தம்பிநாயகம் முதலிய வீரமணிகளும் ஊக்கத்துடன் விளையாடி வெற்றியீட்டினர். இவ்வெற்றியையீட்டுவதற்காக அயராதுழைத்த உடற்பயிற்சி ஆசிரியை **செல்வி மதுரம் செகராஜ சிங்கத்திற்கும்,** கன்னிகாமடத்திற்கும் எமது இதயபூர்வமான பாராட்டுதல்கள் உரித்தாகுக.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான அர்ச். யூதாததேயுவின் வேண்டுதலாலும், பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச். திரேசம்மா ஆகியோரின் அனுக்கிரகத்தாலும் நான் பரீட்சையில் சித்தியடைந்துள்ளேன். இவர்களின் நாமம் புகழப்படுவதாக. மேலும் எனக்குவேண்டிய ஏனைய சகாயங்களையும் அருளுவார்களென நம்புகின்றேன்.

தா. அருளானந்தம்
கட்டைக்காடு


எல்லோரும் விரும்பிச்செல்லும் விருந்தினர் மாளிகை

"பாம் கோட்"

பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

இங்கே உள்ள வசதிகளிற் சில :

- தாராளமான பெரிய அறைகள்
- மின்விசிறிகள் ● றேடியோ சங்கீத உபகரணங்கள்
- சுகதளபாடங்கள்

அறை ஒவ்வொன்றுடனும்

- ஸ்நான சுத்திகரத் தனிஅமைப்புகள்
- உணவுஅருந்த உல்காசமான திறந்த வெளிஇடம்
- மாடி நந்தவனம் ● பூந்தோட்டமுற்றம்

சிறு பிள்ளைகளுக்கு உகந்த

- விளையாட்டு அறைகள் ● சிறு மிருகசாலை
- மோட்டார்வாகனங்கட்கு 'கருஜ்'வசதி

உல்லாசப் பிரயாணிகளுக்கு உதவியான

- வழிகாட்டிகள் ● போக்குவரவு வசதிகள்

மேல்நாட்டு, கீழ்நாட்டு முறைகளில் தயாரிக்கப்படும்

- திறமையான உணவு

| | தனிஆன் | இருவர் | |
|---|---|---|---|
| 1-ம் வகுப்பு அறை | 10 ரூபா | 18 ரூபா | நாள் ஒன்றுக்கு |
| 2-ம் வகுப்பு அறை | 7 ரூபா 50 சதம் | 15 ரூபா | நாள் ஒன்றுக்கு |

கிரமமாய் வருபவர்களுக்கும், வர்த்தக பிரயாணிகளுக்கும் விசேஷ சலுகைகள் காட்டப்படும்.

விவாகவரவேற்பு, பிரியாவிடை முதலிய வைபவங்களுக்கு உகந்த இடம் இது:

"பாம் கோட்" மண்டபம், வெளிமுற்றம் கொண்டாட்டங்களுக்குப் பெற்றுக்கொள்ளலாம்:

மறவாதீர்கள் :

விடுதி வசதிகளுக்கும், கொண்டாட்டங்களுக்கும் யாழ்ப்பாணத்தில் கீர்த்திவாய்ந்த இடம்

"பாம் கோட்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவரே எங்களுக்கு செபிக்கக் கற்பித்தருளும் (லூக்கா 11:1)

சிலவாரங்களின் முன்னே பாதுகாவலனில் "ஐந்தில் வளையாதது" என்ற தலைப்பில் சிறுவர்களை எவ்வாறு பெற்றோர் செபிக்கப்பயிற்ற வேண்டுமென்று எழுதப்பட்டிருந்தது. ஆனால், வளர்ந்த பலருக்குக்கூடச் "செபமென்றால் என்ன?" "செபவேளையில் நாங்கள் என்ன செய்கிறோம்? நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்பனதெரியாதிருத்தல் ஓரளவுக்கு உண்மை என்றே கூறவேண்டும்.

யேசுக்கிறீஸ்துநாதருடைய சீஷர்களாக, மூன்றுவருடகாலம் அவருடன் அல்லும் பகலும் கூடித்திரிந்தவர்களாகிய அப்போஸ்தலர்கள் கூட, அவரைப் பார்த்து ஒருநாள் செபத்தைப்பற்றிய தங்கள் அறியாமையை எடுத்துக்காட்டி, "ஆண்டவரே! எங்களுக்குச் செபிக்கக் கற்பித்தருளும்" என்று கேட்டனர் அன்றோ.

"செபம் என்றால் என்ன?"; "நான் எவற்றைப்பற்றிச் செபிக்க வேண்டும்?"; "கேளுங்கள் கிடைக்கப்படும்" என்பது உண்மையோ பொய்யோ?; "செபித்தல் எப்போது? எங்கே? எப்படி?"; "யேசுநாதரும் செபமும்"; "செபத்தைப் பற்றிய மேலதிகமான கேள்விகள்" என்ற தலையங்கங்களுடன் மெதடிஸ்த சபைப் பாதிரியாரான வண. ஜோர்ஜ் ஈ. குட் (கொழும்பு), கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த கோயிலில் இவ்வருட முதற்பகுதியில் ஆறு அருமையான பிரசங்கங்களை ஆங்கிலத்தில் போதித்தார். நூற்றுக்கணக்கான மக்கள் அவருடைய பிரசங்கங்களைத் தவறாமல் கேட்டுப் பெரும்பயனடைந்தனர். அவற்றுள் ஒன்று இரண்டைக் கேட்கும் வாய்ப்பு மட்டுமே எனக்குக் கிடைத்தது. ஆனால், அச்சொற்பொழிவுகள் அதிர்ஷ்டவசமாக "ஆண்டவரே! எங்களுக்குச் செபிக்கக் கற்பித்தருளும்" என்ற தலையங்கத்துடன் ஆங்கிலத்தில் ஒரு சிறு நூலாக வெளிவந்திருக்கிறது. அவற்றில் காணப்படும் செபம் சம்பந்தமான சில உண்மைகளையே இக்கட்டுரையில் எடுத்து விளக்க விரும்புகிறோம். மனிதனாகப் பிறந்த எவனுக்கும் செபித்தல் ஒரு இன்றியமையாத கடமையாயிருக்கிறது. ஏனெனில், தேவனை ஆராதிப்பதே செபத்தின் முக்கியநோக்கமாகவிருக்கிறது. ஆனால், பெரும்பாலும் மக்கள் தங்களுக்குத் தேவையான சலுகைகளைப் பெறுவதற்கே செபிக்கின்றனர் என்று கூறவேண்டியதாயிருக்கிறது. தேவனுடைய பிள்ளைகள் என்றமட்டில் நாங்கள் தேவனோடு சம்பாஷிக்கவேண்டும். அவருடைய சமூகத்தில் வாழவிரும்பவேண்டும். இதை ஒரு சிறு கதைமூலம் அப்பாதிரியார் விளக்குகிறார். "ஒருமுறை ஒரு சிறுவன் தனது தந்தையின் எழுத்தறைக்குள் பிரவேசித்தான். மிகவும் அவசரமான வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அவனுடைய தந்தை மகனைக் கண்டதும் தனது சட்டைச் சாக்குள் கையைவைத்து ஒரு ஐம்பது சதத்தை எடுத்து மகன்கையில் கொடுத்தார். அப்போது அச்சிறுவன், "தந்தையே எனக்குக் காசு வேண்டாம்" என்று சொன்னான். தகப்பனார் மிகவும் ஆச்சரியத்துடன் மற்றச்சட்டைச்சாக்குள் கையை வைத்து ஒரு பென்சிலை எடுத்து மகன் கையில் கொடுத்தார். அப்போது அப்பையன் "தந்தையே எனக்குப் பென்சிலும் வேண்டாம்" என்று சொன்னான். தகப்பன் தன் வேலையைத் தொடர்ந்து செய்யமுடியாதவராகிப் பையனைப் பார்த்து, "மகனே உனக்கு என்ன வேண்டும்?" என்று வினவினார். அதற்கு மகன் மறுமொழியாக: "தந்தையே! எனக்கு ஒன்றும் வேண்டாம். நான் உம்முடனேயே இங்கு இருக்க விரும்புகிறேன்" என்று கூறினான்.

இப்பையனுடைய மனப்பாங்கைப் போலவே எங்கள் செபமும் இருக்க வேண்டுமென்று அந்தப்பாதிரியார் குறிப்பிடுகிறார். தேவனிடமிருந்து எதையும் பெறுவதற்காகவல்ல, ஆனால், அவரைக் கனம்பண்ணும் நோக்கமாகவே, அவருக்கு எங்கள் அன்பைக்காட்டும் பொருட்டே செபங்கள் இருக்க வேண்டுமென்பதை எங்களில் எத்தனை பேர் நன்கறிவர்?

மேலும் நாங்கள் செபிக்கும்போது கிள்ளைகளைப் போலவன்றி, விசுவாசத்துடனும், முழுவிளக்கத்துடனும் செபிக்கவேண்டுமென்பதை நாம் நினைப்பதில்லை. பரமண்டலமந்திரம், பிரியதத்தமந்திரம், பாவசங்கீர்த்தன மந்திரம், விசுவாசமந்திரம் போன்ற செபங்களைத் "தண்ணிபட்டபாடமாக" நாங்கள் அறிந்திருப்பதால், அவற்றைப் பூரணவிளக்கத்துடனும், பயபக்தியுடனும் செபிக்கிறோம் என்று நாம் சொல்லமுடியுமா?

பாதிரியார் தமது நூலில் **ஜிம்மி** என்ற ஒருவனின் செபத்தை எடுத்துப் புகழ்ந்துரைக்கிறார். "ஜிம்மி ஒரு சாதாரண ஏழைத் தொழிலாளி. அவனோ காலை தொட்டு மாலைமட்டும் கஷ்டமானவேலைசெய்ய வேண்டியவனாயிருந்தான். ஆனால், மதியபோசன இடைவேளையில் கோயிலுக்கு ஓடிப்போய், "யேசுவே! இது நான் ஜிம்மி. நான் போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுத்தன் வேலைத்தலத்துக்குத் திரும்புவான். இவன் உண்மையாகவே செபிக்கிறான் என்று நாம் கூறமுடியும்.

மேலும் அப்பாதிரியார் தம்முடைய பிரசங்கங்களில் நன்றிகூறல், மன்னிப்புக்கேட்டல் என்பன செபித்தலின் இரண்டாம் மூன்றும் அம்சங்களாக அமைய வேண்டுமென்று குறிப்பிட்டார். ஆனால், நான்காவது அம்சமாக "விண்ணப்பித்தல்" என்பதை அழுத்தந் திருத்தமாக வற்புறுத்தினார். யேசுநாதர் சுவாமிதாமே கற்பித்த பரமண்டலமந்திரத்திலே நாங்கள் ஒருபோதும் "என்", "எனக்கு", "நான்" "என்னை", என்று பிரார்த்திப்பதில்லை. ஆனால், அவ்வரிய செபத்தில் "எங்கள்", "எங்களுக்கு" "நாங்கள்", "எங்களை", என்றே செபிக்கிறோம்.

என்றாலும் எங்களுக்குத் தேவையான உதவிகளை நாங்கள் எவ்வாறு தேவனிடம் கேட்கிறோமென்பதை அப்பாதிரியார் பின்வரும் கதைமூலம் விளக்குகிறார். **ஜோர்ஜ்** என்னும் ஒருவன் செபஞ்செய்யச் சென்றான். அவன் அண்ணார்ந்து பார்த்து: "அன்புள்ள தேவனே! என்னையும் என்மகனையும், என் மனைவியையும், என் மகனின் மனைவியையும், எங்கள் நால்வரையும் மாத்திரம், வேறு எவரையும் அல்ல, ஆசீர்வதித்தருளும் ஆமென்" என்று தினமும் பிரார்த்தித்தான். இச்செபத்தில் பிறர்சிநேகம் அணுவளவும் இல்லையென்றே சொல்ல வேண்டும். மேலும் பிறரில் வெறுப்பு, மனத்தாங்கல் முதலியன இருக்கின்றனவென்றும் உய்த்துணரலாம். ஆனால், பிறருக்காக, விசேஷமாக எங்கள் சத்துராதிகளுக்காக, விண்ணப்பிக்கும் செபங்களே உண்மையாகக் கேட்கப்படுகின்றன என்று கூறுவதும் மிகையாகாது.

ஈற்றில், "கேளுங்கள் கிடைக்கப்படும்" என்று வாக்குறுதியளித்த பரமதேவன் ஏன் நாங்கள் கேட்கும் விண்ணப்பங்களை, வரங்களை எங்களுக்குத் தருவதில்லை என்று அப்பாதிரியார் மிகவும் தெளிவாக விளக்கினார்.

மேற்கூறிய மெதடிஸ்த **குட்**பாதிரியாரின் செபத்தைப்பற்றிய சிறந்த நூலைப்பெற்று வாசிப்பது எல்லாக் கிறீஸ்தவர்களுக்கும் பெரும்பயனை விளைவிக்குமென்பது எனது பூரண நம்பிக்கை.

பி. சவரிமுத்து

## அறிவித்தல்

### கண்டி மேற்றிராசனம்

**இலங்கையின் மலைநாட்டுப் பகுதியில் உள்ள விசாரணைப் பங்குகளிலே குருமாராகத் தேவதொண்டு புரிய ஆசிக்கும் வாலிபர்கள் கீழ் காணப்படும் முகவரிக்கு விண்ணப்பம் செய்து கொள்ளவும்.**

**அதிபர்,**
அர்ச். சூசையப்பர் குருமடம்,
பூரணவத்தை,
கண்டி.

---

● முதலாவது உலகயுத்தம் 1914-ம் ஆண்டு ஆவணிமாதம் ஆரம்பமாயிற்று. அதனால் நிகழும் 1964-ம் ஆண்டின் ஆவணிமாதம் அஃது தான் ஆரம்பமான 50-ம் ஆண்டு நிறைவைக் காணலாயிற்று. இரண்டாவது உலக யுத்தம் 1939-ம் ஆண்டு புரட்டாசி மாதம் ஆரம்பமாயிற்று. அதனால் நிகழும் 1964-ம் ஆண்டின் புரட்டாசி மாதம் அது தன் 25-ம் ஆண்டு நிறைவைக் கண்டுகொள்ளலாயிற்று.

---

✝

**மெக்டலீன் நேசம்மா தம்பிராசா**
அவர்களின்

## 2-ம் வருட மரண ஞாபகம்

"திவ்வியயேசுவே உமது திருத்தோளின் கடூரதாயங்களைப்பார்த்து உமது அடியாளாகிய மெக்டலீன் நேசம்மா தம்பிராசாவின் ஆத்துமத்துக்குக் கிருபை புரிந்தருளும்."


**மக்களின் பிரிவுத்துயர்**

கண்ணிமைக்குஞ் சிறுபொழுதும்
கண்மணியே என்றழைத்து
கட்டிமுத்தம் தந்தெம்மை
அரவணைத்துப் பாலூட்டி
வண்ணத்தின் தொட்டிலிலே
கண்வளரத் துயிலவைத்து
வாடுதற்கே இடமளிக்கா
வனப்போடு வளமைதந்து
உன்னிப்பாய் உயிர்காத்து
உத்தமத்தின் வாழ்வமைத்து
உலகோச்ச உயர்வளித்த
உத்தமியே உயிர்ப்பேறே
கண்ணிமைக்கப் போனாயோ!
கட்டவிழ்ந்து நாம்வாட
கருணைக்கே இடமளிக்கா
கண்ணீரிற் போனாயோ.

இவ்வுலகை விட்டுமறைந்து தேவசந்நிதிக்கு அழைக்கப்பட்ட எங்கள் பிரிய அன்னை மெக்டலீன் நேசம்மா அவர்களின் 2-வது வருட நிறைவுதினமாகிய வருகிற 3-11-64 செவ்வாய்க்கிழமை காலை 6மணிக்கு யாழ்ப்பாணம், பரிசுத்த அடைக்கலநாயகி தேவாலயத்தில் இவவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒரு துக்கப் பாடற்பூசை நிறைவேறும். இதனைக் கண்ணுறும் அன்புள்ள கிறீஸ்தவர்கள் இவவிற்கு நித்திய இளைப்பாற்றியை அருளுமாறு மன்றாடும்படி தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

துயருறும் கணவர்:
வஸ்தியாம்பிள்ளை தம்பிராசா
பிள்ளைகள்:
வ. மரியதாசன், வ. திரேசா, வ. நீற்று,
வ. யேசுதாசன், வ. யோசவ்தாசன்.
நம். 96, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.


# அல்ஸ்ட்ரன் மீன்பிடி வலைகள்




அல்ஸ்ட்ரன் மட்டுமே இவ்வனுகூலங்கள் அனைத்தையும் அளிக்கவல்லது.

CIC அல்ஸ்ட்ரனின் விசேஷத் தன்மைகளை மற்ற நார்களுடன் ஒத்திட்டுக் காட்டும் இலவசப் புத்தகம் ஒன்றை பெற இன்றே எமக்கு எழுதுக.

கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிடெட்,
தபால் பெட்டி 352, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளைக் கண்டான்.....

நீ. மரியசேவியர்

அன்னையிலே கண்டான்; அன்பிலே கண்டான்; அமலன் (கடவுள்) என்ற சொல்லிலே கண்டான்; அன்னை என்பவள் அரவணைப்பவள்—



குத்து விளக்கு

அன்பு என்பது அமுதமானது—அமலன் என்பவன் அன்னைக்கும் அன்பிற்கும்காரணமாக இருப்பவன்; அன்னை அன்பின் அவதாரம். ஆனால், அந்த அன்பு உள்ளத்தைக்கொடுத்தது கடவுள்தான்.

அன்பு—அன்னை—அமலன் என்ற சொற்கள், "அ" என்ற எழுத்துடன் தொடங்குகின்றன. அந்த எழுத்திலே—"அ"கரத்திலே—கடவுளைக் கண்ட பெருமை தமிழ் இனத்திற்கு உண்டு.

உலகிற்கு நல்ல நெறியைக் கூறவந்த வள்ளுவர், கடவுளை வாழ்த்தும் பொழுது, "அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்று கூறிக் கடவுளை வாழ்த்துகிறார். எழுத்துக்கள் எல்லாம் "அ" என்ற எழுத்தை முதல் எழுத்தாகவும், அடிப்படையான எழுத்தாகவும் கொண்டிருக்கின்றன; அதேபோல உலகம் கடவுளை அடிப்படையாகக்கொண்டு இருக்கிறது என்பது அதன்கருத்து.

"அ" என்ற எழுத்து இல்லை என்றால், அதைத்தொடர்ந்துவரும் மற்ற எழுத்துக்களுக்கு இடமேஇல்லை. காரணம், எல்லா எழுத்துக்களுக்கும் முதலாக, "அ"கரம்வருகின்றது. கடவுளுக்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பை விளக்குவதற்கு, வள்ளுவர் இதை ஒரு உதாரணமாக எடுத்துக்காட்டினார்.

இது உதாரணம் மாத்திரம் அல்லாமல் முழு உண்மையும் அல்ல. ஏன்?

"அ"கரம், முதல் எழுத்தாகமட்டும் இருக்கின்றதேதவிர, மற்ற எழுத்துக்களின் காரணமாக இருப்பதில்லை. ஓவியன் ஒருவன் சித்திரம் ஒன்றை வரைந்தால், சித்திரத்திற்குக் காரணமாக இருந்தவன் ஓவியன். அது அவனுடைய கைவேலைப்பாடு. ஓவியன் எவ்வாறு தான்வரைந்த சித்திரத்திற்குக் காரணமாக இருந்தானே, அதேபோல் "அ"கரமும் மற்ற எழுத்துக்களுக்கெல்லாம் காரணமாக இருக்கின்றது என்று கூறமுடியாது. ஆனால், கடவுளுக்கும் உலகத்துக்கும் உள்ள தொடர்பு காரணத் தொடர்பு, அவர் இல்லை என்றால் உலகமே இல்லை. உலகம் உருவாகியது அவருடைய செயலினால்.

இன்னும் ஒன்று கவனிக்கப்படவேண்டும். "அ"கரத்திற்கும் மற்ற எழுத்துக்களுக்கும், எழுத்தைப் பொறுத்தமட்டில் அடிப்படையான வேறுபாடுகிடையாது. எல்லாம் எழுத்துக்கள்தான். ஆனால், கடவுளுக்கும் உலகத்துக்கும் அடிப்படையான வேற்றுமை உண்டு. இதை உணர்ந்த வள்ளுவர்: "தனக்குவமை இல்லாதான்"—தனக்கு ஒப்பு உவமை இல்லாதவன்—கடவுள் என்றார். படித்தவருக்கும் படியாதவருக்கும் "அ"கரம் மூலமாகக் கடவுளைச் சுட்டிக்காட்டிய வள்ளுவர், "அ"கரம் முதலாகக் கடவுளைப் பொறுத்தமட்டில் உண்மைமுழுவதையும் விளங்கவைக்கமாட்டாது என்று எண்ணியது, தமிழனுடைய அறிவின் ஆழத்தைக்காட்டுகிறது.

## உருளும் உலகிலே திருச்சபை



### லாஒஸ் ● கலை உலகிலே கத்தோலிக்கர்

லாஒஸ் பிரதேசத்தின் கிராமிய பாடல்களைக்கற்றுப் பாண்டித்திய மடைந்து அவைகளை முதன்முறை நூலாக அழகே அமைத்துப் படங்களுடன் வெளியிட்டார் ஓர் இத்தாலிய குரு. இவ்வரிய சேவையை லாஒஸின் பிரதமர் சுவண்ணபூமா பெரிதும் பாராட்டினர், 80 பக்கங்கள் அடங்கிய இந்நூலைத் தயாரித்தவர் வண. றெக்கோ ஓர் பிஸ்ரி சுவாமியார் அவர்கள்.

### குவாத்தமாலா ● வேதப்பெருக்கத்தின் வேதியர்கள்

தென் அமெரிக்காவைச்சேர்ந்த இப்பிரதேசத்தில் திருச்சபை தரித்து நின்றது. இங்கே 363 குருக்கள் இருந்தும் இந்நிலைமையை நிவிர்த்தி செய்ய ஆயர்கள் முடிவுக்குவந்தனர், சொந்தச்செலவிலே ஞானஉபதேசிமாரைத் திரட்டிக் குருக்கள் செல்லமுடியாத இடங்களுக்கு எல்லாம் அனுப்பினர். இப்பொழுது கன்னியாஸ்திரிகளையும், சந்நியாசிகளையும் தவிர கிட்டத்தட்ட 1,700 உபதேசிமார் பணிசெய்து வருகிறார்கள்.

### கொங்கோ ● கம்மியர் செய்த கலகம்

லெயொப் பொட்வில் என்னும் நகரத்தில் இரு அழகான ஆலயங்கள் உள்ளன. இங்கே பிரார்த்தனையை முடித்து விசுவாசிகள் வெளியேறும் தருணத்தில் பிளாஸ்ரிக் குண்டுகள் வெடித்து நாசமாகின. ஒரு மரியாயின் சேனை அங்கத்தவர் இதற்குப் பலியானார். சீன கமியூனிஸ்தர்களால் தூண்டிவிடப்பட்ட பயங்கரவாதிகளே இதற்குக் காரணமென்று தெரியவருகிறது.

### இங்கிலாந்து ● ஆலயத்திலே மேளம்

கடந்தவாரம் சம்பேதுருவார் ஆலயத்தில் ஆபிரிக்காவைச்சேர்ந்த 22 வேதசாட்சிகள் புனிதபட்டம்பெற்றார்கள். இதைக் கொண்டாடும் முகமாக இலண்டன் வெஸ்ற்மினிஸ்றர் ஆலயத்தில் திவ்விய பலிபூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத்தருணத்தில் ஆபிரிக்க பாடல்கள் பாவிக்கப்பட்டன. இரு ஆபிரிக்ககுருக்கள் வீணைக்குப்பதிலாக முதன்முறையாக, சுதேச மேளங்களில் தாளம் எழுப்பி, தினத்தைச் சிறப்பித்தார்கள்.

### றொடீசியா ● சுதந்திரவிழாவில் சுதேச ஆயர்கள்

கடந்தசனிக்கிழமை வடறொடீசியா சுதந்திரம் அடைந்து **"சாம்பியா"** என்ற பெயருடன் திகழ்கின்றது. சுதந்திரக்கொண்டாட்டத்திலே கலந்துகொள்வதற்காகப் பொதுச்சங்கத்திலிருந்து இரு ஆயர்கள் பறந்துசென்றார்கள். ஞாயிறன்று பிரதான ஆலயத்தில் அரசாங்க அதிபர்கள் கூடியிருக்க திருப்பலி நிறைவேற்றப்பட்டது. பின்பு ஆயர்கள் சுதந்திரதின விழாவில் கலந்துகொண்டார்கள்.

# ஆயரின் அறிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வானவர் ஆலயத்தில் நடைபெறும் பணியினால் திருச்சபைக்கு எதிர்காலத்தில் எண்ணற்ற நன்மைகள் உள.

சங்கத்தின் காரியத்திட்டம் சிக்கலற்றதாய் இருப்பதுடன் திடமான அடிப்படையிலே நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. கிறீஸ்துவையும் கிறீஸ்து அடங்கிய சகலவற்றையும் நோக்குவதிலும் அவரது மறை உடலை நுட்பமாக ஆராய்வதிலும் அத்திட்டம் அடங்கி இருக்கின்றது. கிறீஸ்துநாதரையும் அவருடைய போதகத்தையும் விசுவாசத்துடனும், அவதானத்துடனும் ஞானக்கண்ணால் சிந்திக்கப்படுகிறது.

## பலாபலன் :

மனித சமுதாயத்துக்கு அளிக்கப்படும் இச்சங்கத்தின் முடிவுகள் தேவனின் வார்த்தையையே ஆதாரமாகக் கொண்டிருக்கும். இவை பலன்பயக்கவேண்டுமாயின், மக்கள், விசுவாச மனப்பான்மை, பிறர்சிநேகம், பொறுமை, பரித்தியாகம் முதலிய புண்ணியங்கள் கொண்டுள்ளவர்களாக இருக்க வேண்டும். இத்தீர்மானங்களில் சிலவற்றை உடனடியாக நடைமுறைக்கு கொண்டுவர எண்ணுவது தவறாக இருக்கும் பரிசுத்த தந்தை ஏற்கனவே அறிவித்தது போன்று நீடிய காலத்தின் பின்புதான் நடைமுறைக்குக் கொண்டுவந்து அவற்றின் நிலையான பலாபலன்களை அடைந்து கொள்ளலாம்.

சங்கத்தின் அலுவல் வெவ்வேறு காரியங்களைப்பற்றியிருப்பதுமல்லாமல் ஞானசீவியத்தையும் தழுவி இருப்பதால் தேவனின் முழுநம்பிக்கையையும்வைத்து அவரது அருள் உதவியைப்பெற்று தகுந்த அறிவாற்றலோடு நடாத்த வேண்டும். எனவே, திருச்சங்கத்தின் தீர்மானங்கள் நம் வாழ்வில் பலன் அளிக்க மேற்றிராணிமார்குருக்கள், சந்நியாசிகள், கத்தோலிக்கமக்கள் சகலரும் கிறீஸ்தவ பொறுமையுடன் உத்தியோக பூர்வமான பிரகடனத்தைக் காத்திருப்போம்.

## சீவியத்தின் பரிசுத்ததனம்

தூயவாழ்வு, திருச்சபையின் இரட்சணிய அலுவலில் பங்குபற்றுதல் இவை இரண்டும் கிறீஸ்தவனுடைய இயல்பானகுணங்கள். ஒவ்வொரு கிறீஸ்தவனும் இந்த இருவகை குணங்களைக் கொண்டவனாய் இருக்கிறான். அவன் ஒரு பரிசுத்தனாகவும், ஓர் அப்போஸ்தலனாகவும் இருக்க கடமைப்பட்டிருக்கிறான். அவன் ஞானஸ்நானத்தின் வாயிலாக தேவனின் பிள்ளையாக மாறுகிறான். தேவ வழிபாட்டிலும் திருப்பலியிலும்பங்குபற்றுவதாலும் தேவதிரவிய அனுமானங்களைப் பெறுவதாலும் கிறீஸ்தவ புண்ணியங்களை அனுசரிப்பதினாலும், பரிசுத்ததனத்தில் உயர்வு அடைகிறான்.

## இல்லற அப்போஸ்தலத்துவம்

கிறீஸ்தவன் ஓர் அப்போஸ்தலன். திருச்சபையில் அங்கத்துவம் வகிப்பதனால் அதன் இரட்சணிய அலுவலிலும் ஊக்கமுடன் பங்குபற்றி உழைக்கும் உன்னத கடமை அவன் தலைமேல் சுமத்தப்பட்டிருக்கிறது.

அப்போஸ்தலன் என்னும் சொல் சுவிசேஷத்தைப் பரப்புவதிலும் அதன்படி ஒழுகுவதிலும் ஒருவன் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டுமென்பதைக் காட்டுகிறது. இங்கிலாந்து தேசத்தின் பற்றிக் கிகன் என்பவர் இல்லறத்துவத்தைப்பற்றி விவாதத்தின் இறுதியில் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினார். ஆங்கிலத்தை விளங்கினவர்களும், விளங்கத் தெண்டித்தவர்களும் கூர்ந்த கவனத்துடன் செவிகொடுத்தனர். திருச்சபையின் பொதுச் சங்கங்களில் இல்லறத்தாரில் ஒருவர் சங்கப் பிதாக்கள் முன்னிலையில் உரை நிகழ்த்தியது இதுவே சரித்திரத்தில் முதல் முறையாகும். அவரது பேச்சுக்கு சபையினர் தங்கள் மௌனத்தாலும், ஆழ்ந்த அவதானத்தாலும் சம்மதத்தைத் தெரிவித்தனர்.

கிறிஸ்துவின் மறை உடலில் அங்கத்தவர்களாய் இருப்பவர்கள் குருமாராகவும் குருத்துவம் பெறாத கிறிஸ்தவர்களாகவும் வித்தியாசத்துடன் இருந்தாலும் இவர்கள் கிறிஸ்துவில் ஒருமித்திருக்கிறார்கள். இருசாராரும் இணைபிரியாச் சகோதரர்கள்.

சுவிசேஷ போதனைகளை—படிப்பினைகளை நாளாந்த வாழ்க்கையில் எடுத்துக்காட்டுவது இல்லறத்தாரின் பணியாகும். இதுவே இவர்களின் வாழ்க்கையும் ஆகும்.

உலகத்தைப் பரமபிதாவண்டை இட்டுச்செல்ல உதவிசெய்யும்படி திருச்சபையின் அதிகாரிகள் இல்லறத்தவரை ஆவலுடன் அழைக்கிறார்கள். இவ்வுண்மைகள் அழுத்தம் திருத்தமாய் உரைக்கப்பட்டன. இவைகளை நாமும் ஏற்றுநடக்கப் பிரயாசைப்படவேண்டும். இதன் மூலம் எமதுபங்குகளில் நாம் நடாத்திவரும் கிறிஸ்தவவாழ்வு ஒரு புதிய எழுச்சியை அடைகின்றது. பிரமாண்டமான புதிய கோவில்களைக் கட்டுவதிலும் பெருநாள் நோவனை கொண்டாடுவதிலும் தவறாமல் தாபரிப்புப்பணம் செலுத்துவதிலும் கிறிஸ்தவ சீவியம் தங்கவில்லை. கோவில்களும் பங்குகளும் கிறிஸ்தவர்கள் கடவுள்மட்டில்கொண்டுள்ள கடமைகளைப் பிரமாணிக்கமாக நிறைவேற்றுவதற்கென ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கிறிஸ்தவர்கள், தங்களுக்குள் எவ்வித வேறுபாடுமின்றி அன்புதுலங்கஒன்றித்து வாழ இப்பங்குகள் உதவுகின்றன. பிறருக்குச் சேவைசெய்யும் கடமை மரியாயின் சேனையாளர்களுடையது மாத்திரமல்ல சகல கிறிஸ்தவர்களுடையதுமான பணி என்பதை உணரவேண்டும்.

● ஜேர்மனியிலே 'நெப்றால்ஜி' எனப்படும் ஒருபுதியநோய் அதாவது சிறுநீர்க்கோளத்தில் கட்டியேற்படும் ஒருபுதியநோய் சென்றசிலவருடங்களில் அதிகரித்துள்ளதாம். இதற்குக் காரணம் செல்வச்செழிப்பேயென்று கண்டறியப்பட்டிருக்கிறது. அங்கு பற்றாக்குறை, பஞ்சகாலங்களில் இந்த நோய் காணப்படவில்லையாம். செழிப்பு ஏற்பட்டபின்னரே அதிகமாகத் தலைகாட்டியிருக்கிறதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றங்கள் — திருவழிபாட்டு முறைகளில்

## சங்க பிதாக்களால் அமோகமான வரவேற்பு

— உரோமை

இன்னும் சில மாதங்களில் திவ்வியபூசை நேரத்தில் பலி செலுத்துங்குரு நிருபம் சுவிசேஷம் வாசிக்கும் பொழுது சனங்கள் பக்கமாய்த் திரும்பி நின்று வாசிக்கவேண்டும் என்று திருவழிபாட்டுப் புதியதிட்டம் கொண்ட அறிக்கைஒன்று பொதுச்சங்க பிதாக்களுக்கு சென்ற வாரம் விநியோகிக்கப்பட்டது.

சங்க பிதாக்கள் ஆரவாரத்துடன் புதிய அறிக்கையை வரவேற்றனர்.

எளிய, சாதாரணமான முறைகள் திருவழிபாட்டில் வந்தாக வேண்டியவைகளைச் செய்யுமாறு கூறுகிறது இவ்வறிக்கை.

திவ்வியபூசை ஆரம்பத்தில் உள்ள 42-ம் சங்கீதமும் (Iudica me Deus) கடைசிச் சுவிசேஷமும் கைவிடப்பட்டிருக்கின்றன. இதனுல் பூசை சுருக்கப்பட்டதல்ல; ஆனுல், பிரசங்கத்துக்கும் சனங்களுக்காகச் சொல்லப்படும் சபைச்செபங்கள் கூட்டப்படுவதற்கும், போதிய அளவு நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

கோவில்கள் கட்டும் முறைகள் பற்றியும் இந்த அறிக்கை குறிப்பிட்டிருக்கிறது.

மேலும், கோவிலின் பெரிய நடுப்பீடம், தனிமையாக, வேறென்றேடும் சேர்த்துவைக்கப்படாமல் அமையவேண்டும்.

வேதாகமத்தில் ஆராதனைகளுக்கு உற்சாகம் அளிக்கப்பட்டிருக்கின்றது. ஆனுல், அவைகள் எவ்வாறு நடத்தப்பட வேண்டுமென்று திட்டவட்டமாகக் குறிக்கப்படவில்லை. திவ்வியபலியிலேயே உறுதிபூசுதல், கலியாணதிருச்சடங்குகளை அளிப்பதற்குத் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. குருப்பட்ட திருச்சடங்கைப் பொறுத்தமட்டில், தொடக்கச் சடங்கைத்தவிர மற்றவை எல்லாம் லத்தீன் மொழியிலேயே இருக்கவேண்டும்.

பாஸ்கா, கிறிஸ்மஸ் இரவுப் பூசைப்பலி வேளையில் சற்பிரசாதம் உட்கொண்டவர்கள் காலைப் பூசையிலும் நற்கருணை உட்கொள்ளலாம்.

இந்த மாற்றங்கள் கட்டாயமாக 1965 பங்குனி 7-ந் திகதிக்கு முன் எல்லா இடங்களிலும் நடந்தேற வேண்டும்.

## இப்படியும் நடந்தது !

### வயிறுகுலுங்கச் சிரித்தார்

குக்கிராமம்; அங்கே ஒரு சிற்றுலயம். அர்ச். இராயப்பர் பெயரைக் கொண்டது. திருநாள் கொண்டாடினுர்கள் கிராமத்துமக்கள். பங்குக்குரு வந்தார். அமளிதுமளியான வரவேற்பு. ஆரவாரமாகக் கொடிமரம் உயர்ந்தது. மேளம் முழங்கியது.

நோவனை முன்றுநாள் நடைபெற்றது. மேளக்காரர் பிரச்சனை எழுந்தது. இரண்டாவதுஇரவு நேரம்தப்பி அடித்தனர் மேளத்தை. தாளமும் நல்லாயில்லை. காரணம் வினவினுர் சுவாமி. "நீங்கள் சாப்பிட்டாலும் குடித்தாலும் மூன்று ஆட்களான ஒரே கடவுளின் மகிமைக்காகச் செய்யுங்கள்" என்று சுவாமிசொன்ன அருமையான பிரசங்கத்தை நினைந்து நாங்கள் ஒவ்வொருவரும் மூன்று போத்தல்......" என்ருர்கள் மேளக்காரர்.

கடைசி இரவு வேஸ்பர்; குதூகலமான கொண்டாட்டம். மேளக்காரர் ஒருவர் வரவில்லை. அதுவும் மூத்தவன் வரவில்லை; பிந்திவந்தான். வழியில் மேளம் கட்டிக்கொண்டேவந்தான். மேளத்தில் ஒருபக்கம் ஓட்டை. பறுவாய்பண்ணுது தாறுமாருய் முழக்கினுன்.

கோவிலுக்குள் ஒரே சிரிப்பு. சுவாமியார் சிரிப்பை ஒருவாறு அடக்கியவராகக் காணப்பட்டார். கோபமுகத்தோடு, வந்துகொண்டிருக்கும் மேளக்கார முதல்வனிடம் சென்ருர். சுவாமி தன்னிடம் வருவதைக்கண்டு அவரை வரவேற்பதுபோல் தலையாட்டித் தலையாட்டித் துள்ளித்துள்ளி அடித்தான். ஆத்திரத்துடன் தடியைப்பறித்தார் சுவாமி. மேளத்தை சுவாமியின் பாதத்தில் வைத்துச் சாஷ்டாங்கமாக அவரைக் கும்பிட்டான். சுவாமியாரின் முகத்தில் எழும்பிய கேள்விக்கு அவர் பேசுமுன்னே பதில் கொடுத்தான். "தேவரீர்......நீங்கள் செய்த பிரசங்கம் அப்போஸ்தலர்களைப் பற்றி......பன்னிரண்டுபேருமாக பன்னிரண்டு போத்தல்.......!!"

(ஒரு குருவரினுடைய வாழ்விலே நடந்த உண்மைச்சம்பவம்—12 வருடங்களுக்கு முன்)

## இது தெரியுமா?

—ஆபிரிக்கா.

சென்றசனிக்கிழமை சுதந்திரம் பெற்ற வடறொடீசியா நாட்டின் பெயரை யார்சூட்டினுர்? 1905-ல் ஆபிரிக்காவில் வேதபோதக வேலைசெய்துகொண்டிருந்தவண. மொரேே சுவாமிகள், சிக்கூனி மிஷன் என்ற இடத்தை ஆரம்பித்தார். அதற்குப் பக்கத்தில் இருந்த மரஞ்செடி நிறைந்த பகுதிக்கு லெம்பியா என்று பெயர் கொடுத்தார். சுதந்திர வடறொடீசியாவின் புதுப்பெயர் அதுதான் லெம்பியா.

## மரியாய் அல்லது ஏவாள்

அவள் மரியாய் அல்லது ஏவாள். இதுவே மகளிரின் பெருமை அல்லது சிறுமை. ஆடவருடன் பழகுவதில் அவர்களைக் கடவுள்பால் உயர்த்துகிறவள் அவள். தள்ளி வீழ்த்துகிறவளும் அவளே. கணவன் தன்மனைவி திறமையுள்ளவள்; தன்குறைகளை விளங்கக்கூடியவள்என்று எண்ணுவதின் காரணத்திலும் உண்மை உண்டு.

உலகில் பெரியோர் வாழ்கிருர்கள். காரணம், பின்னணியில் பெரிய பெண் வாழ்கிருள்என்று சொல்லப்படுகிறது. பெரியோர் தளர்ச்சியுற்ருல் ...... பின்னணியில் வாழும் பெண்ணின் தளர்ச்சிதான் காரணமா?

[கதலிக் கசற்]

மௌனமே மங்கையருக்கு மேன்மையான மணி ஆரம். ஆனுல், அணிந்தால் அல்லவோ?

## வழிபாடும்... பண்பாடும்

—யப்பான்.

யப்பான் தேசத்தில் கௌரவம் செய்வது, சாஷ்டாங்கமாக குனிவதின் வழியாக, கடவுளை ஆராதிப்பதும் அதே முறையில்தான். இது அவர்களின் சம்பிரதாயமுறை. தத்தம் தேசியப்பண்பாட்டில் நமது கிறீஸ்துவழிபாட்டையமைக்கும் முகமாக இனிமேல் யப்பான் தேசத்தில் தேவநற்கருணைக்குமுன் சாஷ்டாங்கமாகக் குனியவேண்டும்; ஒற்ற முழந்தாட்படியிடத் தேவையில்லை என்று யப்பானியமேற்றிராணிமார் தீர்மானித்துள்ளார்கள்.

அத்துடன் மேற்றிராணிமாருடைய மோதிரத்தை முத்திசெய்யும் முறையையும் நிறுத்திவிட்டார்கள்.



## சிந்தித்தால்..



**விருந்துக்கு வந்தவர்!**

"பலே! பலே! வெங்காயச்சாம்பார்; உருளைக் கிழங்கு வறுவல் வாசனை கமகம எனறடிக்குதே."

மற்றவர்: கொஞ்சம் உட்காருங்கள்! சமையல் அறைக் கதவைச் சார்த்திட்டு வருகிறேன்!

**அனுதாபம்!**

பையன்: அம்மா! அடுத்தவீட்டில் இருப்பவர்கள் ரொம்ப ஏழைகள் போல் இருக்கிறதே!

தாய்: ஏண்டா அப்படிச் சொல்கிருய்?

பையன்: அவர்கள் வீட்டுக் குழந்தை ஒரு இரண்டு சதக்குத்தியை விழுங்கிவிட்டதாம். அதற்காக ஒரே கூச்சல் போடுகிருர்களே!

**ஞாபகம்!**

ஒருவர்: எனக்கு பத்துருபாய் தரவேண்டுமே, ஞாபகம் இருக்கா?

மற்றவர்: ஓ! நல்லா ஞாபகம் இருக்கு. நீ வரும்போதெல்லாம் ஒளிந்து கொள்ளுகிறேனே, காணவில்லையா?

**நாவலின் முடிவு!**

ஒருவர்: நீங்கள் ஒரு நாவல் எழுதிக்கொண்டு இருந்தீர்களே, அதன் முடிவுதான் என்ன?

எழுத்தாளர்: சோகமான முடிவுதான் அண்ணே!

நண்பர்: எப்படி?

எழுத்தாளர்: பத்திரிகை ஒன்றுக்கு எழுதி அனுப்பிய அந்த நாவல திரும்பி வந்துவிட்டது!

## ஏழைகளின் நண்பன்

பாரதத்தின் பரம ஏழைகளை தாம் தரிசிக்க இருப்பது தமது முக்கிய கருத்துகளுள் ஒன்று என நமது பரிசுத்த தந்தை ஆருவது சின்னப்பர் சமீபத்தில் கூறினுர். ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான உணவும் இந்த ஏழைமக்களுக்கு சாதி சமய பேதமின்றி விநியோகிக்கும்படி அனுப்புகிருர்.

ஏழைகள், பரமஏழைகள்; தரித்திரம், அட்டதரித்திரம்; பசி, கொடும்பசி உண்டு இந்தியாவில். இது உலகம் அறிந்த உண்மை. இந்தியாவின் சில பாகங்களில் கொடியபசி பட்டினி.

பரிசுத்த பாப்பரசர் ஏழைகளைத் தரிசிக்க வருகிருர்; ஏழைகளுக்கு உதவி செய்கிருர். மெய்யாகவே இவர் கடவுளின் பிரதிநிதி என்பது இதில் பிரதிபிம்பிக்கிறது. கடவுள் சிறப்பாக நேசிப்பது ஏழைகளை. நமது ஆண்டவர் ஏழைகளைத் தேடிப்போய் அவர்களுக்கே சிறப்பாக விண்ணரசை அறிவித்தார். கடவுளின் கண்மணிகள் ஏழைகள். கடவுளின் பிரதிநிதியாக பாப்பரசர் ஏழைகளின் மேல் அன்பு கூர்ந்து வருவது எமக்கு ஓர் உன்னத முன்மாதிரிகை.

வயிற்றுப்பசியை போக்குவது கடைசி நோக்கமல்ல; ஆனுல், ஆன்மீக பசிக்கு வயிற்றுப்பசி அடையாளம். ஆன்மீக போசனமாகிய சற்பிரசாதத்தை பாரறிய பறை சாற்றுவதற்கு வயிற்றுப்பசிக்கு உதவிசெய்யும் மனிதப்பண்பு தேவை.

ஒவ்வொரு கிறீஸ்தவனும் இந்த மனிதப்பண்பில் வளரவேண்டும்.

பரிசுத்த பாப்பரசரைப் பின்பற்றுவோம். ஏழைகளை நேசிப்போம். அவர்களின் தேவைகளைச் சிந்திப்போம். உணர்ந்து உதவுவோம்.

கடவுளின் பக்தர்களை மக்கள் அளப்பது வெளிவேடத்தைக் கொண்டல்ல. ஏழைகளைத் தரிசிப்பதும் அவர்களுக்கு உதவுவதுமே உண்மைக் கிறீஸ்தவ வாழ்வு.

"தரித்திரன் பேரிலும் எளியவன் பேரிலும் சிந்தை கொள்ளுகிறவன் பாக்கியவான்" என்கிறது வேதாகமம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 31-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org